தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ்

Tamil Study Centre Homebush Inc

www.tsch.org.au

# Mid Year

# Exam Papers 2009

KG – Year 10

# அரையாண்டு

# பரீட்சைத்தாள்கள் 2009

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: பாலர் “A” திகதி:- 04-07-2009 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி வடிவேற்பிள்ளை

1. **உங்கள் பெயரை எழுதுங்கள்**

(10 புள்ளிகள்)

---

2. **உயிர் எழுத்துக்களையும் ஆயுத எழுத்தையும் எழுதுக.**

(10 புள்ளிகள்)

அ ____________ ____________

____________ ____________ ஊ

____________ ____________ ____________

____________ ஒ ____________

____________

3. **இடைவெளியை நிரப்புங்கள்.**

(20 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| ப் | ம் | டு | ஆ | ட் |
| ட | ல் | மா | ண் | கா |

| | |
|---|---|
| i. அ_____மா | ii. பட் _____ம் |
| iii. அ_____பா | iv. கா_____ |
| v. _____மை | vi. _____டு |
| vii. ஆ_____ | viii. அ_____ணா |
| ix. பா_____டி | x. அக் _____ |

4. **படத்துடன் அதற்குரிய சொல்லை இணையுங்கள்**

(20 புள்ளிகள்)

| | |
|---|---|
| i. ஆமை |  |
| ii. அம்மா |  |
| iii. ஊஞ்சல் | 5 |
| iv. ஒட்டகம் |  |
| v. ஐந்து |  |

| | |
|---|---|
| vi. இலை |  |
| vii. குஞ்சு |  |
| viii. ஈ |  |
| ix. கப்பல் |  |
| x. யானை |  |

5. பார்த்து அதன்படி எழுதுங்கள்

(10 புள்ளிகள்)

i. ச க் க ர ம்

ii. பு த் த க ம்

iii. ச ங் கு

iv. பொ ம் மை

v. க ண்

6. **பின்வரும் எழுத்துக்களை உபயோகித்து 5 சொற்கள் உருவாக்குங்கள்.**

(15 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| பா | த | ம் | பி |
| டு | ட் | ல் | க |
| ப | ண் | டி | வ |

i. ______________________________

ii. ______________________________

iii. ______________________________

iv. ______________________________

v. ______________________________

7. **சொல்வதை எழுதுங்கள்**

(15 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: பாலர் “B”     திகதி:- 04-07-2009     நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி இராமகிருஷ்ணசுவாமி

1. **உங்கள் பெயரை எழுதுங்கள்**

(10 புள்ளிகள்)

______________________________________________

2. **உயிர் எழுத்துக்களையும் ஆயுத எழுத்தையும் எழுதுக.**

(10 புள்ளிகள்)

# அ ________ ________

________ ________ **<u>ஊ</u>**

________ ________ ________

________ **ஓ** ________

________

3. **இடைவெளியை நிரப்புங்கள்.**

(20 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| ப் | ம் | ர | ஆ | ட் |

i. அ______மா

ii. அ______பா

iii. ______மை

iv. ஆ______

v. பா______டி

4. **படத்துடன் அதற்குரிய சொல்லை இணையுங்கள்**

(20 புள்ளிகள்)

| | |
|---|---|
| i. ஆமை |  |
| ii. அம்மா |  |
| iii. ஊஞ்சல் | 5 |
| iv. ஒட்டகம் |  |
| v. ஐந்து |  |

| | |
|---|---|
| vi. இலை |  |
| vii. குஞ்சு |  |
| viii. ஈ |  |
| ix. கப்பல் |  |
| x. யானை |  |

5. பார்த்து அதன்படி எழுதுங்கள்

(20 புள்ளிகள்)

i. ச க் க ர ம்

ii. பு த் த க ம்

iii. ச ங் கு

iv. பொ ம் மை

v. க ண்

6. **சொல்வதை எழுதுங்கள்**

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: ஒன்று திகதி:- 04-07-2009 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி வனதேவா
திருமதி பாலகெங்காதரன்

மாணவர் பெயர்:-

1. **கோடிட்ட இடங்களை நிரப்பி எழுதுக.**

(20 புள்ளிகள்)

i. பாட்டி ஔவைப் பாட்டி

பா______டி ______வைப் ______ட்டி (3 புள்ளிகள்)

ii. பாட்டுப் பாடும் பாட்டி

பாட்______ப் பா______ம் பாட்______. (3 புள்ளிகள்)

iii. ஆத்தி சூடி மூதுரை

______த்தி ______டி மூ______ரை (3 புள்ளிகள்)

iv. ஆக்கித் தந்த பாட்டி

______க் ______த் ______ந்த பாட்டி (3 புள்ளிகள்)

v. நல்ல வழியைக் காட்டும்

____ல்ல வழி______க் ______ட் ______ம் (4 புள்ளிகள்)

vi. நல்வழி பாடிய பாட்டி

நல் ____ழி பாடி____ ____ட்____ (4 புள்ளிகள்)

2. **கோடிட்ட இடங்களை நிரப்பி எழுதுக.**

(5x2=10 புள்ளிகள்)

i. த_____பி (ம, ம், மி)

ii. முத்_____ம் (க, த, ப)

iii. அ_____பா (இ, ப், அ)

iv. புத்த_____ம் (க, கா, வ)

v. நட_______ம் (ண, ன, ள)

3. **வசனமாக ஒழுங்கு படுத்தி எழுதுக.**

(5x2=10 புள்ளிகள்)

i. நல்ல / ஒரு / நான் / மாணவன்

_______________________________________________

ii. நிறம் / சிவப்பு / தக்காளி

_______________________________________________

iii. கதை / நான் / படித்தேன்

_______________________________________________

iv. சூரியன் / உதிக்கும் / காலையில்

_______________________________________________

v. பெயர் / உமது / என்ன

_______________________________________________

4. **படங்களின் பெயர்களை எழுதுக.** (10 புள்ளிகள்)

| | |
|---|---|
|  | i. |
|  | ii. |
|  | iii. |
|  | iv. |
|  | v. |

5. **கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை தெரிவு செய்து எழுதுக.**

(10x2=20 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| சீனி | தூக்கிக் | பருகத் |
| அம்மா | நேரம் | போடும் |
| நீரும் | சூடும் | வழிக்கு |
| | குதிக்கும் | |

காலைத் _______________ கண்ணில் ஒற்றிக்

கட்டிக் கொஞ்சும் _______________

பாலைக் காச்சிச் _______________ போட்டுப்

_______________ தந்த அம்மா

பள்ளிக் கூடம் விட்ட _______________

பாதி _______________ வந்து

துள்ளிக் _______________ என்னைத் தூக்கித்

தோளில் _______________ அம்மா

புழுதி துடைத்து _______________ ஆட்டி

பூவுஞ் _______________ அம்மா

6. **சொற்களைக் கண்டு பிடிக்கவும்.**

(10x2=20 புள்ளிகள்)




| | |
|---|---|
| i. | ii. |
| iii. | iv. |
| v. | vi. |
| vii. | viii. |
| ix. | x. |

7. **படம் வரைந்து வண்ணம் தீட்டுக.** (10 புள்ளிகள்)

| |
|---|
| மஞ்சள் வாழைப்பழம் |
| நீல வானம் |
| பச்சை இலை |

| |
|---|
| சிவப்புச் சூரியன் |
| பல வர்ணக் குடை |

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: இரண்டு    திகதி:- 04-07-2009    நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி தயாளன்

**மாணவர் பெயர்:-**

________________________________________________

1. **பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(5x4=20 புள்ளிகள்)

ஓர் ஊரில் ஒரு வெள்ளைப் புறா இருந்தது. அது ஒரு காகத்தைக் கண்டது. காகம் கறுப்பாக இருந்தது. "நானும் கறுப்பாக இருந்தால் எவ்வளவு நல்லது" என்று புறா நினைத்தது. இதனால் அது கறுப்புச் சாம்பலில் புரண்டு புரண்டு பார்த்தது. சாம்பலை உடல் முழுவதும் பூசியது. ஆனால் கறுப்புப் புறாவாக மாற முடியவில்லை. புறாவிற்கு மிகவும் கவலையாக இருந்தது. இதைப் பார்த்த காகம் "நண்பா, உன் நிறம் வெள்ளை. என் நிறம் கறுப்பு. இரண்டும் அழகான நிறங்கள் தான். நாம் நிறத்தில் வேறானாலும் நல்ல நண்பர்களாக இருக்கலாம்" என்று ஆறுதல் கூறியது.

i. காகத்தின் நிறம் என்ன?

______________________________

ii. புறாவின் நிறம் என்ன?

______________________________

iii. புறா ஏன் கறுப்பாக மாற விரும்பியது?

______________________________

iv. கறுப்பாக மாறுவதற்கு புறா என்ன செய்தது?

______________________________

v. காகம் புறாவிற்கு என்ன சொன்னது?

______________________________

______________________________

2. **சோடி சேர்க்க.**

(5x1=5 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| i. | பழச்சாறு | பார் |
| ii. | தொலைக்காட்சி | குடி |
| iii. | கட்டுரை | தீட்டு |
| iv. | வண்ணம் | கூறு |
| v. | பதில் | எழுது |

3. **உறவுமுறைகளை எழுதுக.**

(10x2=20 புள்ளிகள்)

i. அம்மாவின் தங்கை ______________________

ii. அப்பாவின் தங்கை ______________________

iii. அம்மாவின் தம்பி ______________________

iv. அப்பாவின் தம்பி ______________________

v. அம்மாவின் அம்மா ______________________

vi. அப்பாவின் அப்பா ______________________

vii. அம்மாவின் அக்கா ______________________

viii. அப்பாவின் அண்ணா ______________________

ix. உமது தந்தை ______________________

x. உமது தாய் ______________________

4. **வசனமாக ஒழுங்கு படுத்துக.**

(10x3=30 புள்ளிகள்)

i. மாமி / எங்கள் / இவர்

______________________________

ii. பெற்றோர் / எங்கள் / இவர்கள்

______________________________

iii. படி / குடித்தபின் / பால்

______________________________

iv. விருப்பம்? / உனக்கு / என்ன

______________________________

v. இருவரும் / நாங்கள் / அண்ணன் / தங்கை

______________________________

vi. விட்டாரா? / குளித்து / அப்பா

______________________________

vii. தன் / அமலன் / ஓடினான் / வகுப்புக்கு

______________________________

viii. மாட்டினான் / அதைத் / தோளிலே

______________________________

ix. எடுத்தான் / பையை / கண்ணன்

______________________________________________

x. சென்றார்கள் / இருவரும் / சேர்ந்து

______________________________________________

5. **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(5x1=5 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| சினேகிதி | துலக்கு | பாடின | கழுவு | எடுத்தாள் |

i. வாணி பல் ______________________

ii. குமார் முகம் ______________________

iii. குருவிகள் ______________________

iv. சாந்தி வாணியின் ______________________

v. வாணி பையை ______________________

6. **எழுத்துக்களை நிரப்புக.**

(5x1=5 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| கூ | பா | யா | ரு | டி |

i. பாடி_____டு

ii. கூ_____ச் செல்

iii. ஓடிப்_____ர்

iv. நால்வ_____ம்

v. பள்ளிக்_____டம்

7. **பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி ஐந்து சிறிய வசனங்கள் எழுதுக.**

(5x3=15 புள்ளிகள்)

i. நான்
ii. எனது குடும்பம்
iii. உடல் உறுப்புக்கள்
iv. அன்னையர் தினம்

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: மூன்று    திகதி:- 04-07-2009    நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி ஜெயமனோகர்

**மாணவர் பெயர்:-**

_______________________________________________

1. **பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(5x5=25 புள்ளிகள்)

முன்னொரு காலத்தில் பறவைகட்கும் விலங்குகளுக்கும் இடையே சண்டை நடந்தது. வௌவ்வால்கள் எந்தப் பக்கமும் சேரவில்லை. நம்மால் பறக்க முடியும், அதனால் பறவைகளுடன் நாம் சேரலாம். விலங்குகளுடனும் நாம் சேரமுடியும், ஏனென்றால் எம்மிடம் இறக்கைகள் இல்லை. அத்துடன் பறவைகள் போல நாம் முட்டை இடுவதும் இல்லை. ஆகையால் நாம் ஒரு தனிப்பட்ட நிலையில் இருக்கிறோம். வெற்றி பெறுபவர்களுடன் நாம் சேர்ந்து கொள்ளலாம். இப்போது பொறுமையுடன் நடப்பதை கவனிக்கலாம் என்று எண்ணின.

சண்டை தொடர்ந்து நடந்தது. ஒரு கட்டத்தில் விலங்குகள் வெற்றி பெறலாம் என்ற நிலை. வௌவ்வால்கள் "இது தான் தக்க சமயம்" என்று எண்ணி விலங்ககளுடன் சேர்ந்து கொண்டன. ஆனால் அடுத்த கட்டத்தில் பறவைகளின் நிலை மேலோங்கியது. வௌவ்வால்கள் விலங்குகளுடன் சேர்ந்ததற்கு வருந்தின. உடனே மனம் மாறிப் பறவைகளுடன் சேர்ந்தன.

கடைசியில் ஒரு வழியாகச் சண்டை முடிந்தது. பறவைகளும் விலங்குகளும் சமாதானம் செய்துகொண்டு நண்பர்களாக மாறின. ஆனால் சுயநலம் பிடித்த வௌவ்வால்களை ஒதுக்கித் தள்ளிவிட்டன.

தனித்து விடப்பட்ட வௌவ்வால்கள் இருண்ட பொந்துக்குள் சென்று ஒளிந்து கொண்டன. அன்று முதல் அவை இருட்டில் பொந்துகளில் மட்டுமே வசிக்கின்றன. அந்தி நேரத்தில் மட்டுமே வெளியே வருகின்றன. ஏனென்றால் மாலையில் பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பி விடுகின்றன. விலங்குகளும் இரவு வரும்வரை தம் இருப்பிடத்தை விட்டு வெளியே வருவதில்லை.

இக்கதையிலிருந்து "சுயநலம் கொண்டவர்களை ஒருவரும் விரும்ப மாட்டார்கள்" என்பதை நாம் அறியலாம்.

i. முன்னொரு காலத்தில் எவர்களுக்கிடையில் சண்டை நிகழ்ந்தது?

____________________________________________________

____________________________________________________

ii. சண்டையைப் பொறுமையுடன் எந்த மிருகம் பார்த்துக் கொண்டிருந்தது?

____________________________________________________

____________________________________________________

iii. முதலில் எந்த மிருகம் வெல்லும் நிலை இருந்தது?

____________________________________________________

____________________________________________________

iv. வெளவ்வால்கள் சண்டையின் போது என்ன எண்ணிக் கொண்டு இருந்தன?

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

v. இக்கதையிலிருந்து நீர் அறிவது என்ன?

____________________________________________________

____________________________________________________

____________________________________________________

2. **வேறு சொற்கள் எழுதுக. (ஒத்த சொல்)**

(5x1=5 புள்ளிகள்)

i. வணங்கு ______________________

ii. வீடு ______________________

iii. செல் ______________________

iv. செய்தி ______________________

v. பேசு ______________________

3. **எதிர்ச் சொல் எழுதுக.**

(5x1=5 புள்ளிகள்)

i. மேடு ______________________

ii. சூடு ______________________

iii. நல்லவன் ______________________

iv. முதியவர் ______________________

v. நன்மை ______________________

4. **சொற்களை ஒழுங்கு படுத்தி வசனமாக்குக.**

(10 புள்ளிகள்)

i. உண்டு / யானைக்கு / தும்பிக்கை / நீண்ட

____________________________________________

ii. ஏழு / வானவில்லில் / உள்ளன / நிறங்கள்

____________________________________________

iii. கதைகள் / நல்ல / தாத்தாவிடம் / கேட்கலாம்

____________________________________________

iv. தோகை / மயில் / விரித்து / ஆடும்

____________________________________________

v. இயற்றுபவர் / பாடல்களை / கவிஞர்

____________________________________________

5. **கோடிட்ட இடங்களை தரப்பட்ட சொற்களைக் கொண்டு நிரப்புக.**

(5x1=5 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| இருந்தார் | செல்வார் | பெய்கிறது | பார்த்தாள் | பேசினார்கள் |

i. வாணி தொலைக்காட்சி ______________________

ii. நேற்று அவர்கள் ______________________

iii. இப்பொழுது மழை ______________________

iv. தாத்தா நாளை கன்பரா ______________________

v. அம்மா வாணியுடன் ______________________

6. **விடப்பட்ட இடங்களை நிரப்புக.**

(5 புள்ளிகள்)

i. நான் நாளை என் மாமா வீட்டில் _________________ (தூங்கு)

ii. நேற்று நான் வடை _________________ (சாப்பிடு)

iii. இப்பொழுது நான் தமிழ் _________________ (படி)

iv. நாளை பாடசாலையில் கட்டுரை _________________ (எழுது)

v. நேற்று விளையாட்டுப் போட்டியில் நான் ______________(ஓடு)

7. **கீழே வரும் சொற்களில் ஒவ்வொன்றிலும் 3 சொற்களைக் கண்டு பிடிக்கவும்.**

(5x3=15 புள்ளிகள்)

i. இயற்கைச்சூழல் ________ ________ ________

ii. தொலை பேசி ________ ________ ________

iii. அணிவகுப்பு ________ ________ ________

iv. போர்த்தேங்காய் ________ ________ ________

v. வனவிலங்குகள் ________ ________ ________

8. **தொடர்பு படுத்துக**

(5x1=5 புள்ளிகள்)

| | |
|---|---|
| i. வீணை | i. தமிழ் மொழி வாழ்த்து |
| ii. பாரதியார் | ii. வியாபாரி |
| iii. வள்ளம் | iii. சூரியன் |
| iv. வெளிச்சம் | iv. வாத்தியக் கருவி |
| v. பொருட்களை வாங்கி விற்பவர் | v. கடல் |

9. **பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி ஐந்துக்கு மேற்பட்ட வசனங்கள் எழுதவும்.**

(25 புள்ளிகள்)

i. நானும் எனது குடும்பமும்
ii. எனது பொழுது போக்குகள்

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: நான்கு திகதி:- 04-07-2009 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி சோமாஸ்கந்தன்

**மாணவர் பெயர்:-**

____________________________________________________________

1. **கீழே தரப்பட்ட கதையை வாசித்து கேள்விகளுக்குப் பதில் எழுதுக.**

(5 x 3 = 15 புள்ளிகள்)

ஓர் ஊரில் வியாபாரி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு குதிரையையும் ஒரு கழுதையையும் வளர்த்து வந்தான். வியாபாரி குதிரையைச் சவாரி செய்வதற்கும் கழுதையை பொதி சுமப்பதற்கும் பயன்படுத்தினான்.

ஒரு சமயம் வியாபாரி கழுதையின் மேல் பொருட்களை ஏற்றிக்கொண்டு பக்கத்து ஊருக்குச் சென்று கொண்டிருந்தான். குதிரையும் கூடவே வந்து கொண்டிருந்தது. பாரம் அதிகமாக இருந்தபடியால் கழுதை நடக்கமுடியாமல் சிரமப்பட்டது. அதனால் அது குதிரையிடம் "தோழா, உன்னைவிட நான் சிறியவன். சுமையெல்லாம் என்மீது ஏற்றப்பட்டிருக்கிறது. என்னால் நடக்க முடியவில்லை. எனது சுமையில் கொஞ்சத்தை சுமந்து வரச் சம்மதிக்க வேண்டும்" எனக் கேட்டது. ஆனால் குதிரையோ மறுத்துவிட்டது. பாவம் கழுதை பொதியைத் தானே சுமந்து உடம்பு வலித்து கீழெ விழுந்து இறந்தது. கழுதை இறந்த பின் வியாபாரி குதிரைமேல் மூட்டைகளை ஏற்றினான். கழுதை சுமந்த முழுப்பாரத்தையும் குதிரையே சுமக்க வேண்டியதாயிற்று. குதிரை அப்போது தான் தனது தவற்றை உணர்ந்தது.

"துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்" என்ற உண்மையை அறிய முடிகிறது அல்லவா!

i. வியாபாரி எவற்றை வளர்த்து வந்தான்?

________________________________________

ii. குதிரையை எதற்குப் பயன்படுத்துவார்கள்?

________________________________________

iii. கழுதையை எதற்குப் பயன்படுத்துவார்கள்?

________________________________________

iv. நாம் துன்பப்படுபவர்களுக்கு எம்மால் முடிந்த உதவியைச் செய்தல் கூடாது. சரியா? தவறா?

________________________________________

v. இக்கதையில் எந்த மிருகம் வலியால் இறந்தது?

________________________________________

2. **அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்ட பதில்களில் மிகப் பொருத்தமான பதிலின் கீழ் கோடிடுக.** (5 x 2 = 10 புள்ளிகள்)

i. நேற்றுக் காலை தொலைபேசி மணி ( அடித்தது. அடிக்கும். )

ii. அவன் கேட்ட கேள்விக்கு நான் விடை ( அளித்தேன். அளித்தோம்.)

iii. வாணி கலாவின் வருகையை எதிர்பார்த்துக் ( காத்திருந்தான். காத்திருந்தாள். )

iv. நாளை மழை ( பெய்தது. பெய்யும்.)

v. வெளியில் இருந்து வந்த உரத்த சத்தத்தால் கண்ணன் சொல்வது வாணிக்குக் (கேட்கவில்லை. கேட்டது.)

3. **சொற்களை ஒழுங்கு படுத்தி பொருத்தமான வசனம் அமையுங்கள்** (5 x 2 = 10 புள்ளிகள்)

i. விமானத்தில் / மெல்பனில் / அக்கா / இருந்து / கலா / வந்தார்

________________________________________

ii. சிறுவர்கள் / பட்டாசு / வெடிப்பார்கள் / கூடி

________________________________________

iii. வாணியும் / பூந்தோட்டத்தில் / கலாவும் / பறித்தார்கள் / பூக்கள்

________________________________________

iv. கலாவை / விமானநிலையத்திற்கு / அழைப்பதற்கு / சென்றோம் / நாங்கள்

________________________________________

v. நாம் / நாடு / அவுஸ்திரேலியா / வாழும்

________________________________________

4. 


மேலே உள்ள படத்தில் அவதானித்தவற்றைப் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக. வசனங்கள் அமைப்பதற்கேற்ற சொற்கள் தரப்பட்டுள்ளன.

பறக்கிறது, மாலை, விற்கின்றனர், நீந்துகின்றனர், சிறுமி, சிறுவர்கள், கடற்கரை, கப்பல், மீன், பட்டம். (5x3=15 புள்ளிகள்)

I. ________________________________

II. ________________________________

III. ________________________________

IV. ________________________________

V. ________________________________

5. **பிரித்து எழுதுக.** (5x2=10 புள்ளிகள்)

i. கிழக்குக்கரை ________________ + ________________

ii. குறும்புக்கேள்வி ________________ + ________________

iii. முகிற்கூட்டம் ________________ + ________________

iv. வண்ணப்பறவை ________________ + ________________

v. வாழ்க்கைமுறை ________________ + ________________

6. **சொற்களைக் கண்டுபிடியுங்கள்**

(5x2=10 புள்ளிகள்)

i. அதிகாலை ________________ ______________

ii. காணவில்லை ________________ ___________

iii. பார்வையிட்டனர் ________________ ______________

iv. நுழைவுச்சீட்டுக்கள்________________ ___________

v. மிருகக் காட்சிச்சாலை ________________ ________

7. **வாக்கியங்களை கருத்து விளங்க இலக்கத்தில் ஒழுங்கு படுத்துக.**

(2X5=10 புள்ளிகள்)

**அ)**

1. ஔவையார் குனிந்து பழங்களை எடுத்தார்.
2. நன்றாகப் பழுத்த பழங்கள் கீழே விழுந்தன.
3. சிறுவன் மரக்கிளையை அசைத்தான்.
4. அவற்றில் மண் ஒட்டியது.
5. பழங்களில் ஒட்டியிருந்த மண் போகும்படி வாயால் ஊதினார்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

**ஆ)**

1. மாணவர்கள் ஒழுங்காக (வரிசையாக) வந்து பிரார்த்தனை மண்டபத்தில் கூடினர்.
2. பிற்பகல் இரண்டு மணிக்கு நான் அம்மாவுடன் பாடசாலைக்கு வந்தேன்.
3. நான்காம் வகுப்பு மாணவாகள் தமிழ்மொழி வாழ்த்துப் பாடினார்கள்.
4. பின் தங்கள் வகுப்புகளுக்குச் சென்றார்கள்.
5. பாடசாலை மணி அடித்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

8. **பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி பத்து வசனங்கள் எழுதவும்.**
(20 புள்ளிகள்)

i. உயிரினக் காட்சிச்சாலை
ii. செல்லப்பிராணி
iii. நீர் விரும்பும் உணவு

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: ஆறு திகதி:- 04-07-2009 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திரு ச தேவராசா

மாணவர் பெயர்:-

# அரையாண்டுப் பரீட்சை 2009

**ஆறாம் வகுப்பு** **நேரம்: இரண்டு மணித்தியாலங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

**1. கீழே உள்ள சொற்களைப் பயன்படுத்தி கோடிட்ட இடங்களை நிரப்புக:**

ஓர் ஊரில் ஒரு ________________________________ தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தாள். அவளின் பெயர் ______________________________. அவள் தனது வீட்டிற்கு அருகில் இருக்கும் பாடசாலையில் ______________________ படித்துக் கொண்டிருந்தாள். நல்ல குணங்களைக் கொண்டவளாக அவள் இருந்தமையால் வீட்டில் ______________________________________ பாடசாலையில் ஆசிரியர்களினதும் அன்பையும், ஆதரவையும் அவள் பெற்றாள். ________________________________ நாட்களிலும் பாடசாலை முடிந்து வீடு திரும்பிய பின்னும் தாயாருக்கு தேவையான உதவிகளைச் செய்தாள்.

பாடசாலையில் ______________________________________ அன்புடன் பழகினாள். ஆசிரியர்கள் கொடுக்கும் ________________________________ ஒழுங்காகச் செய்து காட்டினாள். அரையாண்டுப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் அதிக புள்ளிகளைப் பெற்று வகுப்பில் ________________________ மாணவியாக வந்தாள். அதனால்

எல்லோரினதும் _________________________________ பெற்றாள்.

பிள்ளைகள் எல்லோரும் அபிநயாவைப் போல நல்ல பிள்ளைகளாகவும், _________________________________________ பிள்ளைகளாகவும் இருத்தல் வேண்டும்.

(20 புள்ளிகள்)

**தோழிகளுடன், பெற்றோரினதும், பாராட்டைப், கெட்டிக்காரப், சிறுமி, விடுமுறை, முதலாவது, அபிநயா, வீட்டுவேலைகளை, ஆறாம் வகுப்பில்**

## 2. பின்வரும் பந்திகளை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இன்றைய கால கட்டத்தில் உலகில் வாழ்கின்ற பெரும்பாலான மக்களைக் கவர்ந்ததாக இசை விளங்குகின்றது. இதனாலேயே முத்தமிழில் ஒன்றாக இசைத் தமிழ் விளங்குகின்றது. "இசையால் மயங்காத இதயம் ஒன்றில்லை" என்று கவிஞர் ஒருவர் பாடினார். "இசை கேட்டுப் புவி அசைந்தாடும் அது இறைவன் வரமாகும்" என்று இன்னொரு கவிஞர் பாடினார். இத்தகைய சிறப்பு வாய்ந்த இசை இயற்கையின் கூறுகளிலிருந்தே உருவானது என்று அறிஞர் கூறுவர். மூங்கில் மரங்களின் துவாரங்களினூடாக காற்று வீசுகின்ற போது குழல்இசை தோன்றியது. மலையிலிருந்து ஊற்றெடுத்து நதி நீர் பாய்ந்து வருகின்றபோது தாள இசை தோன்றியது. அதிகாலைப் பொழுதை வரவேற்று பறவைகள் பாட்டுப் பாடுகின்றன.

இவ்வாறு இயற்கையின் அம்சங்களிலிருந்து தோற்றம் பெற்ற இசை பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட பலவிதமான கருவிகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. அந்தக் கருவிகளை வாத்தியங்கள் என்று அழைத்தார்கள். அவை தோல் வாத்தியங்கள், துளை வாத்தியங்கள், நரம்புவாத்தியங்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன. தவில் எனப்படுகின்ற மேளம், மிருதங்கம், தபேலா போன்றன தோல்வாத்தியங்கள் ஆகும். புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்றன துளை வாத்தியங்கள் ஆகும். வீணை, வயலின் போன்றன நரம்பு வாத்தியங்களாகும். தமிழர்களால் மங்கள வாத்தியங்கள் என்று பெருமையாகப் போற்றப்படுகின்ற வாத்தியங்களாக தவில் (மேளம்), நாதஸ்வரம் என்பன விளங்குகின்றன.

1. எது முத்தமிழில் ஒன்றாக விளங்குகின்றது?

______________________________________________________

2. இசையைப்பற்றி கவிஞர் ஒருவர் எவ்வாறு பாடினார்?

______________________________________________________

______________________________________________________

3. இசையைப்பற்றி இன்னொரு கவிஞர் எவ்வாறு பாடினார்?

______________________________________________________

______________________________________________________

4. இசை எவ்வாறு உருவானது என்று அறிஞர் கூறுவர்?

______________________________________________________

______________________________________________________

5. இயற்கையில் இருந்தே இசை உருவானது என்பதற்கு இரண்டு உதாரணங்கள் எழுதுக.

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

6. பிற்காலத்தில் இசை எவ்வாறு வெளிப்படுத்தப் பட்டது?

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

7. மூன்று வகை வாத்தியங்களும் எவை?

________________________________________________________

8. தோல்வாத்தியங்கள் இரண்டு எழுதுக.

9. நரம்பு வாத்தியங்கள் இரண்டு எழுதுக.

10. தமிழர்களின் மங்கள வாத்தியங்கள் எவை?

(20 புள்ளிகள்)

**3. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயற்படுபொருள் என்பனவற்றை எழுதுக.**

1. மயில் நடனம் ஆடுகின்றது
2. கண்ணன் பாட்டு பாடினான்
3. அதோ தெரிகின்றது பாடும் வீடு
4. அதிகாலைவேளை கருமையான குயில் இனிமையான கானம் இசைத்தது
5. காயத்திரி ஓட்டப்போட்டியில் முதலாவதாக வந்தாள்
6. கலைவிழாவில் மாணவர்கள் நாடகம் நடித்தார்கள்
7. முயல் வேகமாக ஓடி ஆமையை வென்றது
8. கவிதாவும், புனிதாவும் பரதநாட்டியம் ஆடுவார்கள்
9. அங்கே விழுகின்றது பனிநுரை
10. புல்லாங்குழலை தம்பி வாசிக்கின்றான்

| | எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

| | எழுவாய் | பயனிலை | செயற்படுபொருள் |
| --- | --- | --- | --- |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |
| 9 | | | |
| 10 | | | |

(20 புள்ளிகள்)

4. இலங்கையில் அல்லது இந்தியாவில் உள்ள உங்கள் உறவினருக்கு அவுஸ்திரேலியாவில் உள்ள இடங்களைப்பற்றிக் குறிப்பிட்டு அவரை இங்கே வருமாறு ஒருகடிதம் எழுதுக.

(80 சொற்கள் - 20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 15 வசனங்கள் எழுதுக:

1. எனது விடுமுறை
2. குளிர்காலம்

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: ஏழு திகதி:- 04-07-2009 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி விஜயநாதன்

**மாணவர் பெயர்:-**

________________________________________

1. **பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(5x4=20 புள்ளிகள்)

அவுஸ்திரேலியாவில் காலத்திற்குக் காலம் இயற்கை அழிவு ஏற்படுவது அனைவரும் அறிந்ததே. இதற்கு முக்கிய காரணம் காலநிலையே. அவுஸ்திரேலியாவின் தென் பகுதி வெப்பமான, வறண்ட காற்றின் தாக்கத்திற்கு உள்ளாவதால், அப்பகுதிகளில் திடீரென வெப்பநிலை அதிகரிக்கலாம். உலகில் காட்டுத்தீயின் பாதிப்புக்கு உள்ளாகும் இடங்களில் அவுஸ்திரேலியாவின் தென்கிழக்குப் பகுதிகள் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியன.

காட்டுத்தீ பொதுவாக ஒரு மணி நேரத்தில் சுமார் ஒன்று முதல் மூன்று கிலோமீற்றர் வரை பரவக்கூடியது. அது பத்து முதல் இருபது மீற்றர் வரை அகலமும் உயரமும் உடைய தீப்பிழம்புகளைக் கொண்டிருக்கும். எனினும் கடுமையான காட்டுத்தீ பன்னிரண்டு கிலோமீற்றர் வேகத்தில் பரவக்கூடியது. இதன் சுவாலைகள் உயர்ந்து பரந்து செல்லலாம். காட்டுத்தீ காடுகளையும், வீடுகளையும் தீக்கிரையாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தும்.

காட்டுத்தீயிலிருந்து வரும் வெப்பமே பொதுவாக உயிர் அழிவதற்குக் காரணம். இதனால் காட்டுத்தீ நெருங்கும்போது உடல் முழுவதையும் மூடக்கூடிய முறையில் உடை அணிதல் பாதுகாப்பானது. தீப்பிழம்புடன் கலந்த வெப்பமான காற்றை சுவாசிப்பதும், உடலின் நீரை வெப்பத்தினால் இழப்பதும், எரிந்து விழும் மரம் போன்றவற்றால் தாக்கப்படுவதும் உயிர் அழிவிற்குக் காரணங்களாகக் கருதப்படுகின்றன.

காட்டுத்தீயின் வெப்பத்திலிருந்து தப்புவதற்கு வீட்டினுள் அல்லது மறைப்புள்ள இடத்தினுள் இருத்தலே சிறந்த வழி. தீ அபாயம் உள்ள நாட்களில் பயணம் செய்ய வேண்டி ஏற்பட்டால் வானொலிமூலம் அபாய அறிவிப்புக்களைக் கேட்டு அதற்கேற்பப் பயணப்பாதையைத் தெரிவுசெய்தல் அவசியம்.

i. அவுஸ்திரேலியாவின் எப்பகதிகளில் காட்டுத்தீயினால் ஆபத்து அதிகம் உள்ளது?

________________________________________

________________________________________

ii. காட்டுத்தீயால் உயிரிழப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என்ன?

________________________________________

________________________________________

iii. காட்டுத்தீயின் வெப்பத்திலிருந்து தப்புவதற்குரிய வழி என்ன?

______________________________

______________________________

______________________________

iv. காட்டுத்தீயினால் ஏற்படும் சேதம் யாது?

______________________________

______________________________

______________________________

v. பொருள் தருக.

- தீ ______________________
- சேதம் ______________________
- வெப்பம் ______________________
- காலநிலை ______________________

2. **பிரித்து எழுதுக.**

(5x2=10 புள்ளிகள்)

i. பந்தாட்டம் ______________________

ii. அன்புள்ளம் ______________________

iii. முடிவில்லை ______________________

iv. சிறப்புரை ______________________

v. விழாக்காலம் ______________________

3. **அடைப்புக்குள் இருக்கும் சொல்லை பொருத்தமான முறையில் மாற்றிப் பின்வரும் வசனங்களைப் பூர்த்தி செய்க.**

(10x2=20 புள்ளிகள்)

பாலன் தினந்தோறும் திடலுக்கு காற்பந்து விளையாடப் ______________________ (போ). அவனுடைய நண்பர்களும் அங்கே ______________________ (வா). திடலில் அவர்கள் எல்லோரும் சேர்ந்து பந்து ______________________ (விளையாடு). மாலை ஆறு மணிக்கு பாலன் வீடு ______________________ (திரும்பு). பின்பு, அவன் ______________________ (குளி). பாலன் இரவில் தன் பள்ளிப் பாடங்களைப் ______________________ (படி). பின்னர், அவனும் பெற்றோரும் உணவு ______________________ (உண்). சற்று நேரம் அவன் ஓய்வாக ______________________ (இரு). அப்போது அவன் தொலைக்காட்சி ______________________ (பார்). இரவு ஒன்பது மணிக்கு அவன் உறங்கச் ______________________ (செல்).

4. **பின்வரும் வாக்கியங்களைக் கருத்துத் தொடர்புடையனவாக அமையுமாறு வரிசைப்படுத்தி எழுதுக.**

(5x3=15 புள்ளிகள்)

i. அதை அருகில் வைத்துப் பார்த்தால் கண்கள் கூசும்.

ii. மருத்துவர்கள் ரேடியத்தைச் சிகிச்சைக்குப் பயன்படுத்த முடியுமா என்று ஆய்வு செய்தனர்.

iii. அது மிகுந்த ஒளியுடைய பளபளப்பான பொருள்.

iv. இறுதியில் புற்றுநோய்ச் சிகிச்சைக்கு இதனைப் பயன்படுத்தலாம் என்று அவர்கள் அறிந்தனர்.

v. “ரேடியம்” என்பது ஒருவகை அரிய உலோகப் பொருள்.

5. **பின்வரும் சொற்களை வைத்து வசனம் எழுதுக**

(5x2=10 புள்ளிகள்)

i. பாடசாலை

ii. கலாசாரம்

iii. பத்திரிகை

iv. கலைவிழா

v. தமிழர்

6. **பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(25 புள்ளிகள்)

i. நீர் கொண்டாடும் கொண்டாட்டங்களுள் ஒன்று
ii. தொலைக்காட்சி
iii. வானொலி

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை

வகுப்பு: எட்டு    திகதி:- 04-07-2009    நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி குலராஜா

**மாணவர் பெயர்:-**

______________________________

1. கீழே வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.
(15 புள்ளிகள்)

புல், பூண்டு, செடி, கொடி, மரம் என்பன தாவரங்கள் எனப்படும். தாவரங்கள் இல்லாவிட்டால் இந்தப் பூமியில் ஒரு சிறு புழுக்கூட உயிர் வாழ முடியாது. எனவே, பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கு மூலகாரணியாக தாவரங்கள் விளங்குகின்றன. இத்தாவரங்களில் மரங்கள் மட்டுமே சிறப்பிடம் பெறுகின்றன.

மரங்கள் நமக்கு சத்துணவை வாரி வழங்குகின்றன. இலை, பூ, பிஞ்சு, காய், கனி, கிழங்கு முதலிய உணவுகளை உற்பத்தியாக்கி எமக்கு அளிக்கின்றன. வீடு கட்டுவதற்கும், வீட்டுத் தளவாடங்கள் செய்வதற்கும் உபயோகப்படுவன மரங்களே.

மரங்களின் வேர்கள் மண்ணில் ஊன்றி மண்ணை இறுகப் பற்றிப் பிடித்துள்ளன. பெருமழை பெய்யும் போது வெள்ளம் மண்ணை அரித்துச் செல்லும். அவ்வாறு மண் அரிக்கப்படாமல் மரங்களின் வேர்கள் தடுக்கின்றன. மரத்தின் இலைகள் கிளைகள் முதலியன நிலத்தில் விழுந்து உக்கிப்போகின்றன. அதனால் மண் செழிப்படைகின்றது. மரங்கள் நெருக்கமாக வளரும் இடம் காடு. இக்காட்டு மரங்கள் வானுர ஓங்கி வளர்ந்திருக்கும். அவை முகிற்கூட்டங்களைத் தடுத்துக் குளிரச் செய்கின்றன. அதனால் மழை பெய்கிறது.

மரங்கள் பல திசைகளிலும் கிளைகளைப் பரப்பி வளர்கின்றன. அக்கிளைகளில் இலைகள் செறிந்து காணப்படுகின்றன. அவ் இலைகளோடு கூடிய மரங்கள் பசுங்குடை போல் தோன்றுகின்றன. அக்குடை நிழலைத் தருகிறது. சூரியனின் கொடிய வெப்பத்தைத் தடுக்கிறது. மண்ணிலுள்ள ஈரத்தன்மையைக் காப்பாற்றுகிறது.

i. தாவரங்கள் எனப்படுபவை யாவை?

_______________________________________________

_______________________________________________

ii. பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கு மூலகாரணியாகத் திகழ்பவை யாவை?

_______________________________________________

_______________________________________________

iii. மரங்கள் உற்பத்தியாக்கும் உணவுகள் யாவை?

_______________________________________________

_______________________________________________

iv. பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களைத் தருக.

- வழங்குதல் ______________________
- உபயோகம் ______________________
- நெருக்கமாய் ______________________
- காடு ______________________

v. மரங்கள் மண்ணரிப்பை எவ்வாறு தடுக்கின்றன?

______________________________________________

______________________________________________

______________________________________________

vi. மரங்கள் மண் செழிப்படைய எவ்வாறு உதவுகின்றன?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

vii. "காட்டு மரங்கள் மழை பெய்வதற்கு உதவுகின்றன." இக்கூற்றை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

2. கீழ்வரும் தனிவாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக.

(10 புள்ளிகள்)

i. கண்ணன் தமிழ்ப் பாடத்தில் சிறந்து விளங்கினான்.
அவனுக்குப் பரிசு கிடைத்தது.

______________________________________________

______________________________________________

ii. நான் பாடசாலைக்குச் சென்றேன்.
நான் விளையாட்டுப்போட்டியிற் கலந்து கொண்டேன்.

______________________________________________

______________________________________________

iii. மாணவர்கள் கட்டுரை எழுதினார்கள்.
அதை ஆசிரியரிடம் கொடுத்தார்கள்.

______________________________________________

______________________________________________

iv. வாணி தொலைக்காட்சி பார்த்தாள்.
பின்னர் தன் பாடங்களைப் படித்தாள்.

______________________________________________

______________________________________________

v. கம்பர் ஆதரிப்பார் யாருமின்றி வறுமையில் வாடினார்.
அப்போது அவர் சடையப்பரைப்பற்றிக் கேள்விப்பட்டார்.

______________________________________________

______________________________________________

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.
(10 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| விழுந்து | தரமான | வேகமாக | அழுக்காக | பார்த்து |
| துரத்தி | உயரமான | மகிழ்ச்சியாக | அடுக்கி | தாவி |

i. துணிகள் ______________________ இருந்தன.

ii. நாய் திருடனை ______________________ ஓடியது.

iii. வாணி புத்தகங்களை ______________________ வைத்தாள்.

iv. கண்ணாடி ______________________ உடைந்தது.

v. மரத்தில் குரங்கு ______________________ பாய்ந்தது.

vi. குமரன் ______________________ ஓடினான்.

vii. வேடன் குறி ______________________ சுட்டான்.

viii. தேர்வில் வெற்றி பெற்றவன் ______________________ இருந்தான்.

ix. ______________________ மரம் சாய்ந்து விட்டது.

x. ______________________ கட்டுவதற்குப் பாராட்டுக் கிடைத்தது.

4. உரைப்பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தாருங்கள். (10 புள்ளிகள்)

## நாடகக் கலை

கண்ணுக்கும் காதுக்கும் நல்விருந்தளிப்பது நாடகக்கலை. சங்க காலத்தில் இருந்தே தமிழ் மக்கள் நாடகக் கலையில் சிறப்புப் பெற்றிருந்தனர். பிற்காலத்தில் நாடகக்கலை பலவாறாகப்பிரிந்து மக்களின் வாழ்க்கை இயல்புகளுக்கு ஏற்ப மாறி வந்ததை அறிய முடிகிறது.

விழாக்கள் நடைபெறும்போது அதற்கேற்ப நாடகங்களையும் தமிழர்கள் நடாத்தி வந்தனர். பெரும்பாலும் ஊர் மன்றமும் கோயில் வீதிகளுமே நாடகம் நடக்கும் இடங்களாக அமைந்தன. திறந்த வெளியில் தீப்பந்த ஒளியில் இருவரால் பிடிக்கப்பட்ட திரைச்சீலைக்கு முன்னால் நாடகங்களை நடித்தனர்.

அண்மைக்காலத்தில் தமிழ் நாடகம் புதிய வளர்ச்சியை எட்டியுள்ளது. நாடக மேடையில் பலவிதமான உத்திகள் பின்பற்றப்படுகின்றன.

ஆரம்ப கால நாடகங்களையும் இன்றைய நாடகங்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் நாடகம் பெற்றுள்ள பிரமாண்டமான வளர்ச்சி தெரியவரும். ஆங்கிலத்தில் சிறந்த நாடக ஆசிரியர் என்று சேக்ஷ்பியரை குறிப்பிடுவார்கள். அதுபோல தமிழிலும் பெயர் சொல்லக்கூடியளவிற்கு பெரிய நாடக ஆசிரியர்கள் இருந்திருக்கின்றனர். ஈழத்தில் நடிகமணி வைரமுத்து, கலையரசு சொர்ணலிங்கம், பேராசிரியர் மௌனகுரு, குழந்தை சண்முகலிங்கம் போன்ற பலர் நாடகத்திற்கு சிறந்த பணியாற்றியுள்ளனர்.

தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த பின்னர் பல நாடுகளில் நாடகங்களை மேடையேற்றி வருகிறார்கள். தமிழ் நாடகம் ஐரோப்பிய அரங்கில் பெரு வெற்றி பெற்று வருகிறது.

அவுஸ்திரேலிய தமிழ் சமூகத்திலும் நாடகக் கலை வளர்ந்து வருகிறது. தமிழ்ப் பாடசாலைகளும் சமூக நிறுவனங்களும் இக்கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. அண்ணாலியார் இளைய பத்மநாதன், வானொலி மாமா மகேசன் ஆகியோர் மாணவாகளுக்கென நாடகங்களை எழுதித் தயாரிப்பதில் குறிப்பிடத்தக்க இருவர். சிட்னி தமிழ் அரங்கக் கலைகள் வருடந்தோறும் நாடகங்களை நடாத்திவருகிறது.

வானொலிகள், தொலைக்காட்சிகள் என்பன அதிகம் தோற்றம் பெற்றுள்ள இக்காலத்தில் நாடகம் வானொலியிலும் சின்னத்திரையிலும் பெரு வெற்றி பெற்று வருகிறது. உலகம் எப்படி மாறினாலும் அதற்கேற்ப தானும் மாறிவரும் ஒரு கலையாக நாடகம் உள்ளது.

i. கண்ணுக்கும் காதுக்கும் ஒத்தசொல் தருக.

________________________________________

ii. கோவில், வீதி ஒத்தசொல் தருக.

________________________________________

iii. உரைப்பகுதியிலுள்ள ஈழத்து நாடக ஆசிரியர்களின் பெயர்களைத் தருக.

________________________________________

iv. உரைப்பகுதியிற் குறிப்பிட்ட ஊடகங்கள் எவை?

________________________________________

v. நாடகக்கலை தவிர்ந்த வேறு இரு கலைகளின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.

________________________________________

5. “அ” பகுதியிலுள்ள சொற்களுக்கு ஏற்ற முடிக்கும் சொற்களை “ஆ” பகுதியிலிருந்து தெரிவு செய்து இணைத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)

| அ | ஆ |
|---|---|
| i. நூல் | சஞ்சிகை |
| ii. பாடசாலை | பிரதி |
| iii. மாதாந்தச் | போட்டி |
| iv. வாரப் | வெளியீடு |
| v. கையெழுத்துப் | நிகழ்ச்சி |
| vi. புத்தகக் | தொடங்கியது |
| vii. சூரிய | விழா |
| viii. பொங்கல் | பத்திரிகை |
| ix. தொலைக்காட்சி | உதயம் |
| x. தமிழ் அறிவுப் | கண்காட்சி |

6. கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வானொலி ஒன்றில் அறிவிப்பதற்கு ஏற்ற வடிவத்தில் பிறந்த நாள் வாழ்த்து ஒன்றைத் தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| பிறந்தநாள் கொண்டாடுபவர் பார்த்தீபன் | | |
| பெற்றோர் | தந்தை | பத்மநாதன் |
| | தாய் | சுசீலா |
| வயது | 14 | |
| கொண்டாடும் இடம் | | அவரது இல்லம் |
| காலம் | | 24-06-2009 |
| வாழ்த்துபவர்கள் | | பெற்றோர், அக்கா, அண்ணா, தம்பி, தங்கை, தாத்தா, பாட்டி, உற்றார் உறவினர்கள் |

உங்களுக்கு உதவக்கூடிய மேலதிக சொற்கள்:

பல்லாண்டுகாலம் சீரும்சிறப்புடன் பல்கலையும் கற்று

7. பின்வரும் எழுத்துக்களில் தொடங்கி கட்டங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.
(12 புள்ளிகள்)

| எழுத்து | ப | அ |
|---|---|---|
| ஆண் பெயர் | | |
| பெண் பெயர் | | |
| இடம் | | |
| படம் | | |
| பொருள் | | |
| உணவு | | |
| மிருகம் | | |
| பறவை | | |

8. பின்வரும் சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலச் சொற்களை எழுதுங்கள்.
(8 புள்ளிகள்)

i. தமிழ் மொழி ____________________

ii. தமிழ்ப் பண்பாடு ____________________

iii. ஆரம்ப பாடசாலை ____________________

iv. உயர்தரப் பாடசாலைச் சான்றிதழ் ____________________

v. சமூக மொழி ____________________

vi. ஊடகங்கள் ____________________

vii. தேசிய கீதம் ____________________

viii. தாய் நாடு ____________________

9. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் சுயசரிதைக் கட்டுரை எழுதுக.

(15 புள்ளிகள்)

i. முறிந்த குடை
ii. கிழிந்த புத்தகம்
iii. உடைந்த மேசை

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: ஒன்பது   திகதி:- 04-07-2009   நேரம்: 2 மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி பு புருஷோத்தமர்

**மாணவர் பெயர்:-**

1. **பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**
(15 புள்ளிகள்)

தென்னிந்தியாவிலுள்ள திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தேரூர் என்பது கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் பிறந்த ஊர். தந்தையார் பெயர் சிவதாணுப்பிள்ளை. தாயார் ஆதிலட்சுமி அம்மையார் ஆவார். தாய்தந்தை இருவரின் பரம்பரையும் வழிவழி புலமை வாய்க்கப் பெற்றது.

விநாயகம்பிள்ளை 1876ஆம் ஆண்டு பிறந்தார். தேரூரில் தமது ஆரம்பக்கல்வியை முடித்து, பின் கோட்டாறு ஆங்கிலக் கல்லூரியில் சேர்ந்து பயின்றார். ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற பின்பு திருவனந்தபுரம் ஆசிரிய பயிற்சிக் கழகத்தில் படித்து "பயிற்சி பெற்ற ஆசிரியர்" ஆனார்.

கல்வி பயிலும் இளமைக் காலத்திலேயே விநாயகம்பிள்ளையிடம் கவிபாடும் புலமையும் அமைந்திருந்தது. திருவாவடுதுறைச் சாத்தலிங்கத் தம்பிரானிடம் தமழ்க் கல்வியை முறையாகப் பயின்று பெரும் புலமை அடைந்தார். தமது இருவதாவது வயதில், படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பக்திப் பெருக்கைத் தரவல்லதாக "அழகம்மைப் பதிகத்தை" பாடினார்.

இவரது மனைவி பெயர் உமையம்மை. பிள்ளை அவர்கள் முப்பது ஆண்டுகள் ஆசிரியப்பணி புரிந்தார். இக்காலத்தில் குயில், தேவி, ஆண்டான் கவிராயன், யதார்த்தவாதி முதலான புனைபெயர்களோடு பல பாடல்களைப் பத்திரிகையில் வெளியிட்டார். இப்பாடல்கள் யாவும் தொகுக்கப்பட்டு "மலரும் மாலையும்" என்ற கவிதைத் தொகுதியாக வெளிவந்தது.

இவரது பாடல்கள் குழந்தைகளுக்கும் பாலர்களுக்கும் மிக ஏற்றவை. "பாட்டியின் வீட்டுப் பழம்பானை", "தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு", "எனது சுகதுக்கங்கள்" என சிறுவர்களுக்கேற்ற பல பாடல்கள் உள்ளன.

"ஆசியஜோதி" என்பது பிள்ளை அவர்கள் எழுதிய புத்த பகவானுடைய சரித்திரத்தைக் கூறும் சிறு காவியம். "நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம்" என்பதும் இவர் பாடிய கவிதை நூலே.

இவர் உணர்ச்சி மிக்க கவிஞராக மட்டுமன்றி சிறந்த அறிஞராகவும் விளங்கினார். இவர் எழுதிய "காந்தளூர்ச்சாலை" என்ற நூலும், "நாஞ்சில் நாட்டு மக்கள் வரலாறு" என்ற ஆங்கிலக் கட்டுரையும் இதற்குச் சான்று.

1940 ஆம் ஆண்டில் சென்னை மகாணத் தமிழ்ச் சங்கத்தார் "கவிமணி" என்ற பட்டத்தை வழங்கிப் பிள்ளையை கௌரவித்தனர்.

i. கவிமணி பிறந்த ஊர், தாய் தந்தை பெயர் என்பவற்றை எழுதுக. (1.5 புள்ளிகள்)

- ● ● 

ii. தமது கல்வியை எங்கே பெற்றார்? (1 புள்ளி)

- ______________________________

- ______________________________

iii. “பயிற்சி பெற்ற ஆசிரியர்” தகுதியை எங்கே எப்படிப் பெற்றார்? (1 புள்ளி)

- ______________________________
- ______________________________

iv. சாத்தலிங்கத் தம்பிரான் யார்? (1 புள்ளி)

______________________________

v. அழகம்மைப் பதிகத்தின் சிறப்பு என்ன? (1.5 புள்ளிகள்)

______________________________

vi. இவர் கொண்ட புனைபெயர்கள் யாவை? (2 புள்ளிகள்)

| | |
|---|---|
| • | • |
| • | • |

vii. கவிமணியின் குழந்தைப்பாடல்கள் சில தருக. (2 புள்ளிகள்)

- ______________________________
- ______________________________

viii. இவர் எழுதிய பிற நூல்களின் பெயரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

- ______________________________
- ______________________________

ix. கவிமணி சிறந்த அறிஞர் என்பதற்குச் சான்று பகர்பவை எவை? (1 புள்ளி)

______________________________

x. பிள்ளை அவர்களுக்குக் “கவமணி” என்ற பட்டத்தை யார் எப்போது வழங்கிக் கௌரவித்தனர்? (2 புள்ளிகள்)

______________________________

2. **தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கீழேயுள்ள அட்டவணையை நிரப்புக.**

(8 புள்ளிகள்)

இலக்கியத்துறையில் வரலாற்றுத் தகவல்களைப் புனைந்து, தனது சிறமையினால் வாசகர் மத்தியில் நீங்கா இடம் பிடித்த எழுத்தாளர்களுள் குறிப்பிடத் தக்கவர் "கல்கி" ஆவார்.

"கல்கி" என்று இலக்கியத்துறையில் பிரபலம் அடைந்த இவரது இயற்பெயர் ரா.கிருஷ்ணமூர்த்தி என்பதாகும். இவர் புனைகதை இலக்கியத்தில் கருத்தைச் செலுத்தி உருவாக்கிய முதல் எழுத்தோவியம் "விமலா" என்னும் குறுநாவல் ஆகும்.

1937ல் ஆனந்த விகடனில் "கள்வனின் காதலி" எனும் முழுநாவலை முதலில் வெளியிட்டார். இவரது வரலாற்று நாவல்களில் மிகவும் பிரசித்தமானவை "பொன்னியின் செல்வன்", "சிவகாமியின் சபதம்", "பார்த்திபன் கனவு" என்பனவாகும். இவை கல்கிக்கு பெரும் புகழை ஈட்டித்தந்தன.

பார்த்திபன் கனவில் "பார்த்திப மகாராஜா", பொன்னியின் செல்வனில் "வந்தியத்தேவன்", சிவகாமியின் சபதத்தில் "சிவகாமி", என்போர் புனையப்பட்ட பாத்திரங்களாக இருப்பினும் கதையைச் செவ்வனே சொல்வதற்கு அவை பெரிதும் துணைபுரிகின்றன.

கல்கி தனது படைப்புகளிலே நகைச்சுவையையும் விட்டு வைக்கவில்லை. சிவகாமியின் சபதத்தில் "தேரோட்டி கண்ணன்", பொன்னியின் செல்வனில் "ஆழ்வார்" ஆகிய கதாபாத்திரங்கள் மூலம் நகைச்சுவை உணர்வு வெளிப்படுகின்றது.

| | |
|---|---|
| பந்தியில் குறிப்பிடப்படுபவர் (0.5 புள்ளி) | |
| இவருடைய இயற்பெயர் (0.5 புள்ளி) | |
| இவர் சிறப்புப் பெறக் காரணம் (0.5புள்ளி) | |
| இவருடைய முதலாவது நூல் (0.5 புள்ளி) | |
| முதலாவது நாவல் எதில் எப்போது வெளிவந்தது? (1.5 புள்ளிகள்) | |
| இவர் எழுதிய வரலாற்று நாவல்கள் (1.5 புள்ளிகள்) | |
| வரலாற்று நாவல்களில் இவர் புனைந்த கற்பனைப் பாத்திரங்கள் | |

| | |
|---|---|
| (1.5 புள்ளிகள்) | |
| வரலாற்று நாவல்களில் இவர் புனைந்த நகைச்சுவைப் பாத்திரங்கள்<br>(1.5 புள்ளிகள்) | |

3. **கீழேயுள்ள அட்டவணையை வாசித்து விளங்கி, அதை உமது சொந்த நடையில் ஒரு பந்தியாக எழுதுக.**

(7 புள்ளிகள்)

| | |
|---|---|
| 2008 ஒலிம்பிக் சாதனையாளர் | மைக்கல் ஃபெல்ப்ஸ் |
| பெற்ற தங்கப்பதக்கங்கள் | பதினொன்று |
| அப்போது வயது | இருபத்திமூன்று |
| தாயார் பெயர் | தெபோரா |
| இவரின் வெற்றிக்கு உகந்த துணை | தாயாரின் அனுசரணை, அன்பு, வழிகாட்டல், வளர்ப்பு |
| இவரது பயிற்சியாளர் | பாப் பௌமேன் |
| இவரது சாதனை விளையாட்டு | நீச்சல் |
| சிறுவயதில் இவரிடம் காணப்பட்ட குறைபாடு | அதிக துறுதுறுப்பும் கவனச் சிதறலும் (ADHD) |
| இவர் நீச்சல் பயிற்சியை ஆரம்பித்தது | 10வது வயதில் |

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4. **கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பந்தியிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.**

(10 புள்ளிகள்)

| | | | |
|---|---|---|---|
| பள்ளத்தில் | பெருவிருந்தாகும் | வேகத்தில் | தனிச்சிறப்பாகும் |
| நெளிந்து | நயாகரா அருவி | வழிந்தோடும் | ஐக்கிய |
| பிரிந்து | எல்லையாக | சிதறித் | |

உலகிலுள்ள நீர்வீழ்ச்சிகளுள் நயாகரா மிகவும் புகழ்பெற்றது. இதன் அழகே ________________________. மக்கள் பொழுது போக்கும் இடங்களுள் இது சாலச்சிறந்தது.

வட அமெரிக்காவில் கனடாவுக்கும் ____________________________ அமெரிக்க நாட்டிற்கும் இடையில் ____________________________ உள்ளது நயாகரா ஆறு. இது ஐரி ஏரியில் உற்பத்தியாகி வளைந்து ___________________________ ஓடுவதே கண்ணுக்குப் ____________________________. "கோட் ஐலண்ட்" என்னும் சிறு தீவைச் சுற்றி வரும்போது நயாகரா நதி இரு பிரிவுகளாகப் ____________________ , இரு அருவிகளாக ஐம்பது மீற்றர் ____________________________ விழுகிறது.

இத்தகைய மேட்டுப்பாங்கான நிலப்பகுதியிலிருந்து வழிந்து விழும் கவின்மிகு ____________________________ ஒரு வட்டச் சுனையில் வேகமாக விழுகிறது. விழுகின்ற ____________________________ நாற்புறமும் அதன் திவலைகள் _____________________

தெறிக்கின்றன. அவை பரவிப் பாலாவி போல மேலெழுந்து வெண்மேகத்துடன் கூடுவது போல பார்ப்போர்க்குத் தோன்றும்.

5. **பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

(20 புள்ளிகள்)

i. உமது பாடசாலைக் கலைவிழா பற்றி உமது பாடசாலைச் சஞ்சிகையில் வெளியிடுவதற்காகக் கட்டுரை ஒன்று எழுதுக.

ii. "புலம் பெயர்ந்து வாழும் நாமும் நமது சந்ததியும் தாய்மொழி தமிழைக் கற்க வேண்டும்" என்ற தலைப்பில் நீர் ஆற்ற இருக்கும் பேச்சை எழுதுக.

iii. அயல் நாட்டில் வாழும் உமது நண்பனை நண்பியை கோடைவிடுமுறைக்கு அவுஸ்திரேலியாவுக்கு வரும்படி கேட்கிறீர். அவரை இங்கு வரத் தூண்டத்தக்க வகையில் அவருக்குக் கடிதம் எழுதுக.

iv. "கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. கதவைத் திறந்து பார்த்தேன். மலைத்துப் போனேன்" என்று தொடங்கி ஒரு கற்பனைக் கதையை எழுதுக.

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2009

வகுப்பு: பத்து திகதி:- 04-07-2009 நேரம்: 2 மணி

ஆசிரியர்: திருமதி சந்திரதாஸ்
திருமதி யோகராஜா

மாணவர் பெயர்:-

1. **கீழே வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.** (மொத்தம் 20 புள்ளிகள்)

இப்போதெல்லாம் எதிர்பாராத காலத்தில் பெருமழை பொழிகிறது. கடும் குளிர் காலத்தில் குளிர் குறைவாக இருக்கிறது. வேகமாக காற்று வீசி அழிவுகளை ஏற்படுத்துகிறது. இப்படியாக ஏன் காலமாறுதல் உலகெங்கும் ஏற்படுகிறது தெரியுமா? பூமி வெப்பமடைகிறது. அதனால் தான் குளிர், வெப்ப நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று வானியல் அறிவியலாளர்கள் கூறுகிறார்கள். சரி இதற்குக் காரணம் இயற்கையிலேயே அமைந்ததா என்றால் சிறிதளவு இயற்கையாகவும் செயற்கையாக மனிதர்களால் உருவாக்கப்பட்ட சில காரணங்களாலும் தான் நாம் வாழும் பூமி வெப்பமடைகிறது என்பது அறிவியல் அறிஞர்களின் முடிவு.

இயற்கைச் சமநிலையை நாம் குழப்பி விட்டோம். அதிக வெப்பம் உமிழும் மின் விளக்குகளை அதிகமாக எரிய விடுகிறோம். மோட்டார் வாகனங்களை தேவைக்கு அதிகமாகப் பாவிக்கின்றோம். இவ்வாகனங்கள் வெளிவிடும் கரியமிலவாயு (Carbon de-oxide) சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றது. குளிர்சாதனப் பெட்டிகள், குளிர்சாதனம் (Air-Condition) ஆகியவற்றையும் இப்போது அதிக அளவு பயன்படுத்துகிறோம். இவைகளிலிருந்து வெளிவரும் வாயுக்களாலும் (Chloro flero Carbon) சுற்றுச் சூழல் பாதிப்படைகிறது. இதனால் ஓசோன் (Ozone) மண்டலத்தில் ஓட்டை விழுந்து பூமியில் வெப்பம் அதிகரிக்கின்றது.

வெப்பம் அதிகரிப்பால் பூமியின் வடதுருவம் தென்துருவம் ஆகிய பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகி கடலுடன் கலப்பதால் கடலில் உள்ள நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது. இதனால் பூமியின் கரையோரத் தாழ்நிலங்கள் கடலுக்குள் தாழ்ந்து போகும் அபாயம் உள்ளது. அத்தோடு பூமியின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் பெருமழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை அழிவுகளும் அதிகரிக்கும் நிலை ஏற்படும். இன்று, சுற்றுச்சூழல் பிரச்சனை உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இப்பிரச்சனைக்கு எப்படித் தீர்வு காணலாம் என்பது பற்றிக் கருத்து வெளியிட்ட ஆய்வாளர்கள் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பசுமை இல்ல (Green House) வாயுக்களைக் கட்டுப்படுத்த வேண்டும், மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும், காற்றாலை, சூரிய ஒளியில் மின் உற்பத்தி செய்தல் போன்ற சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர்.

நாம் இயன்றவரை இயற்கையைப் பேணிப்பாதுகாக்க வேண்டும். தேவையற்ற வாகனப் பாவனையைக் குறைத்துக்கொள்ள வேண்டும். மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். நாம் இருக்கும் இடத்தில் மட்டும் மின்விளக்குகளோ மின்விசிறியோ இயங்கினால் போதும். யாரும் இல்லாத இடங்களில் மின்சாரம் வீணாவதை நிறுத்திவிடுங்கள். நாம் இருக்கும் இடத்தை விட்டுச் செல்லும்போது மறவாமல் மின்விளக்குகளையும், மின்விசிறியையும் அணைத்து விடவேண்டும். இப்படிச் சிறு சிறு பழக்கங்களை மாணவர்களாகிய நீங்கள் இப்போதே கற்றுக்கொண்டால் நாளைய உலகம் சிறப்பாக இருக்கும் அல்லவா?

i. இவ்வுரைப்பகுதியில் கூறப்பட்ட பிரதானமான விடயம் எது? (2 புள்ளிகள்)

________________________________________________________________

ii. தற்போது உலகெங்கும் ஏற்படும் காலமாறுதலுக்கு என்ன காரணம் என வானியல் அறிவாளிகள் கருதுகிறார்கள்? (3 புள்ளிகள்)

iii. சுற்றுச்சூழல் பாதிப்படைவதற்காண காரணங்கள் 5 தருக. (5 புள்ளிகள்)

iv. இப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்கு ஆய்வாளர்கள் முன்வைத்த ஆலோசனைகள் 2 தருக? (2 புள்ளிகள்)

v. சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்க நீர் என்ன செய்யலாம் என்பது பற்றி உரைப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு சுருக்கமாக எழுதுக. (4 புள்ளிகள்)

vi. "மனிதனின் செயற்பாடுகளால் பூமி வெப்பமடைந்து சுற்றுச்சூழல் பாதிப்பு அடைகிறது." இக்கூற்றை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? ஆம், இல்லை எதுவானாலும் அதற்கான காரணங்களைத் தருக. (4 புள்ளிகள்)

2. **பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.**

(20 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| அல்லாத | உடைய | இனத்தவர்கள் | பாரம்பரியங்களையும் | மொழி |
| அமையும் | வருங்காலச் | ஊக்குவிக்கு | சமுதாயமாகும் | கொண்ட |
| பல்கலாசாரப் | தத்தம் | நாட்டிற்கு | தொடர்பு | அமையும் |
| மொழிகளைத் | தமிழர் | செய்கிறது | அவுஸ்திரேலியர்களாலும் | தந்து |

நாம் வாழும் நாடான அவுஸ்திரேலியா ஒரு பலஇன, பலமொழி, பலமத, பல்கலாசார பாரம்பரியங்களை ________________ ஒரு பன்மைச் ______________________________. இங்கே ஆங்கிலேயர், ___________________, கிரேக்கர், ஜேர்மனியர், சீனர் எனப்பல __________________________வசிக்கிறார்கள். இருந்தாலும் ஆங்கிலம் அவுஸ்திரேலியாவின் நிர்வாக மொழியாகவும் பல்வேறு ________________________ தம் தாய்மொழியாகக்__________________________ ஏனைய அவுஸ்திரேலியர், மற்றைய அவுஸ்திரேலியருடன் ________________________ கொள்ளும் முக்கிய ஊடகமாக எல்லா _________________________ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

பலஇன, பலமொழி _________________________ பாரம்பரியங்களைக் கொண்ட பல்லினச் சமுதாயம் அவுஸ்திரேலிய _______________________உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் சாதகமான நிலையைத் தருவதாகவும் பெரும் சொத்தாகவும் _____________ என உணர்ந்த அரசு இங்குள்ள ஆங்கிலேயர் _____________________ பிற இனத்தவரை _________________________ இன _________________________ ______________________ மதகலாசார ______________________அவற்றின் __________________________ தொடர்ந்து பேணிப் பாதுகாக்கவும் வளர்க்கவும் நம் இளைய தலைமுறையினருக்கும் _________________________ சந்ததியினருக்கும்

பாதுகாத்துக் கையளிப்பதை ___________________________ முகமாக ஒரு தனி அரச அமைப்பை ஏற்படுத்தித் ______________ பொருளாதார உதவிகளையும் செய்கிறது.

3. **கீழே தரப்பட்டுள்ள பெயர்ச்சொற்களைப் பயன்படுத்தி 20 சொற்களுக்குக் குறையாமல் ஒரு பந்தி எழுதுக.**

(5 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| சிரித்த | சாப்பிட்ட | படித்த | சுவைத்த | அழுத |

4. **பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

(15 புள்ளிகள்)

i. "தமிழ் மொழியைக் கற்பதால் மாணவர்களாகிய நாம் அடையும் பயன்கள்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

ii. நீண்ட நாட்களின் பின் இலங்கையில் இருக்கும் இடம்பெயர்ந்த உமது நண்பரின் முகவரி உமக்குக் கிடைத்துள்ளது. தொடர்பில்லாது இருந்த காலத்தில் உமது வாழ்வில் நடைபெற்ற முக்கிய சம்பவங்களை விபரித்து இலங்கையில் இருக்கும் உமது நண்பருக்கு ஒரு கடிதம் எருதுக.

iii. நீர் பாடசாலையோடு கல்விச்சுற்றுலா சென்ற போது உம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவம் என்ற தலைப்பில் ஒரு கற்பனைக் கட்டுரை எழுதுக.

5. **கேட்டுக் கிரகித்துப் பதிலளித்தல்**

**அ) பகுதி 1**

ii. நீர் கேட்ட உரையாடலில் குறிப்பிட்ட போட்டியின் பெயர் என்ன?
(2 புள்ளிகள்)

iii. இப்போட்டிகள் எந்த எந்த மாநிலங்களில் நடைபெற்றது? எவ்வளவு காலமாக நடைபெறுகிறது?
(3 புள்ளிகள்)

iv. இந்த வருடப்போட்டிக்கான கருப்பொருள் யாது?
(3 புள்ளிகள்)

v. இதில் குறிப்பிட்ட போட்டிகள் 3 எழுதுக.
(3 புள்ளிகள்)

vi. எந்தப் போட்டிகளுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படுகிறது?
(2 புள்ளிகள்)

vii. இப்போட்டிகளுக்கான விபரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இரண்டு வழிகளை எழுதுக.

(2 புள்ளிகள்)

ஆ) பகுதி 2

**i.** இவ்வுரையாடலில் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி யாது?

(1 புள்ளி)

**ii.** எத்தனை மணியளவில் விழா ஆரம்பமானது?

(1 புள்ளி)

**iii.** விழாவிற்கு வந்திருந்த 3 உறவினர்களை எழுதுக.

(3 புள்ளிகள்)

**iv.** அங்கு நடைபெற்ற பிரதான போட்டி யாது?

(2 புள்ளிகள்)

**v.** இறுதியாக எல்லோருடைய பராட்டுக்களையும் பெற்ற நிகழ்வை விபரித்து எழுதுக.

(4 புள்ளிகள்)

**vi.** இவ்விழாவை நீர் ஒழுங்கு செய்திருந்தால் எத்தகைய போட்டிகளை வைத்திருப்பீர் எனச் சுருக்கமாக எழுதுக.

(3 புள்ளிகள்)

**vii.** எத்தனை மணிவரை விழா நடைபெற்றது?

(1 புள்ளி)